கடந்த மாத பதிவுகள்

தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 29.07.2012

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 22.02.2011

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (59)

### 59. பொதுமக்களை அச்சுறுத்த வதை முகாம் கைதிகளைக் காட்சிப் பொருளாக்கிய புலிகள்!



நான் குறிப்பிட்ட வரணி 'இறைச்சிக்கடை' முகாமிலிருந்து கொண்டுவரப்பட்ட நால்வருக்கும் அங்கு நடந்த சித்திரவதைகள் கொஞ்சநஞ்சமல்ல. அவற்றுடன் ஒப்பிடுகையில் எனக்கு நடந்த சித்திரவதைகள் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நால்வரில் வின்சன்ற், பிரகாஸ் ஆகியோர் எம்முடன் இருந்தனர். பிரகாஸ் எப்பொழுதும் அழுவதும், எதையாவது வெறுத்துப் பார்ப்பதுமாகத்தான் காலத்தைக் கழித்தார். மகேஸ்வரனும் பஸ் நடத்துனரும் அருகிலிருந்த அறையில் அடைக்கப்பட்டிருந்தபடியால், அவர்கள் நிலை என்ன என அறிய முடியவில்லை. ஆனால் மகேஸ்வரன் விசாரணைக்காக வெளியே அழைத்துச் செல்லப்படுகையில் சில வேளைகளில் என்னைக் காண்கையில், அவரது பார்வை 'இப்படியாக வந்து மாட்டுப்பட்டு விட்டோமே?' என்று சொல்வது போல இருக்கும். ஆனால் அந்த பஸ் நடத்துநர் எப்பொழுதும் எதற்கும் அஞ்சாதவர் போல நெஞ்சை நிமிர்த்திக் கொண்டுதான் செல்வார்.

வின்சன்ற் என்பவபரைப் பொறுத்தவரையில், அவர் புலிகள் மீது கடும் கோபத்துடனும் வைராக்கியத்தியத்துடனும் இருந்தார். 'இவங்கள் எங்களுக்குச் செய்த அநியாயத்துக்கு பதிலுக்குப் பதில் ஏதாவது செய்ய வேண்டும்' என்பார். அவர் எல்லோரையும் நம்பிக் கதைக்கமாட்டார். என்னுடனும் வேறு ஓரிருவருடனும் மட்டுமே இரகசியமாகக் கதைப்பார். அதற்கும் அந்தப் புதிதாக வந்த புலிகளின் முக்கியமான நபரால் இடைய+று வந்துவிட்டது. அந்த நபரைச் சுலபமாக அழைப்பதற்காக இப்போதைக்கு அவரத பெயரை 'வரதன்' என வைத்துக்கொள்வோம். ஆனால் சூழ்நிலை சரியாக அமைந்து வாய்ப்புக் கிடைத்தவேளையில் வின்சன்ற் என்னுடன் கதைக்கும் போதெல்லாம், 'சந்தர்ப்பம் கிடைத்தால் பண்ணைக் கடலைக் கடந்து மண்டைதீவில் உள்ள ஆமியிடம் சென்று பாதுகாப்புக் கோர வேண்டும்' எனச் சொல்வார்.

சாதாரணமான மக்களை தமது கொடூரமான சித்திரவதைகள் புலிகள் மூலம் எப்படி இராணுவத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்கிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம். இன்னொரு உதாரணத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சோதி என்றொருவர் எம்முடன் புலிகளின் வதை முகாமில் ஒன்றாக இருந்தார். ஏதோ ஒரு மாற்று இயக்கத்துடன் தொடர்புடையவர் என்பதற்காக கைதுசெய்யப்பட்டு கடுமையான சித்திரவதைக்குப் பிறகு எம்முடன் அடைக்கப்பட்டிருந்தார். சித்திரவதை காரணமாகச் சரியாக நடக்க முடியாத நிலையில் இருந்தார். அவர் ஒருமுறை என்னுடன் கதைக்கும்போது, 'இவங்களுடைய சித்திரவதையை அனுபவிப்பதைக் காட்டிலும், இவங்கள் எங்களைக் கைதுசெய்ய வரும் நேரங்களில் இவங்கடை கையிலை அகப்படாமல் தப்புவதற்கு தற்கொலை செய்வதற்காக மடியிலை எப்பவும் ஒரு பொலிடோல் (நஞ்சு) போத்திலை வைச்சிருக்க வேணும்' என்று சொன்னார்.

உண்மைதான். புலிகளின் ஆட்சியில் ஒருவர் வாழ்வதானால், அந்தச் சோதி சொல்வது போல, ஒவ்வொருவரும் ஒரு நஞ்சுப் போத்தலுடன் வாழ்வதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும். எமது வதை முகாமுக்குள் இருப்பவர்கள் மத்தியில் ஒரு நகைச்சுவை கதை உலாவியது. அதாவது, 'புலிகளின் 'தமிழீழத்'தில் உள்ள ஒவ்வொருவரும் என்றாவது ஒருநாள், ஏதாவது ஒரு காரணத்துக்காகப் புலிகளின் வதை முகாம் வாழ்க்கையைக் கட்டாயமாக அனுபவித்துத்தான் ஆக வேண்டும். எனவே தள்ளாத வயதில் புலிகளின் வதை முகாமுக்கு வந்தால், புலிகள் செய்யும் 'உபசாரங்களை'த் தாங்கிக்கொள்ள இயலாது. எனவே இளமையாக இருக்கும் போதே எங்கள் முறையை புலிகளது வதை முகாமில் கழித்துவிடுவது நல்லது' எனச் சொல்வார்கள்.

அந்த நால்வரில் ஒருவரான வின்சன்ற் சைக்கிள் கடை வைத்திருந்தவர் என்றபடியால், புலிகள் தாம் புதிதாக வாங்கிய (அவரைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான் வாங்கினார்களோ தெரியாது) சுமார் 20 சைக்கிள்களை அவரைக்கொண்டு கழுவிப்பூட்டுவித்தார்கள். வதை முகாமுக்கு வெளியே இருந்த விறாந்தையில் வைத்து அவரைக்கொண்டு அந்த வேலையைச் செய்வித்தார்கள். அந்த நேரங்களில் உள்ளே உள்ள வதை முகாம் கைதிகளுக்கு வழங்கப்படாத தேநீரைக்கூட புலிகள் அவருக்கு வழங்கியதாக அவர் சொன்னார்.

அத்துடன், 'விடுதலையாகி வெளியே போனபின்னர் என்ன செய்வதாக உத்தேசம்?' எனவும் புலிகள் அவரிடம் அடிக்கடி வினவியுள்ளனர். அப்படி புலிகள் வினவியதை வைத்தும், தன்னுடன் அந்நியோன்யமாக புலிகள் கதைத்ததை வைத்தும், புலிகள் தன்னை என்றோ ஒருநாள் விடுதலை செய்துவிடுவார்கள் என அந்த அப்பாவி மனிதன் நினைத்திருக்கிறார். சில நாட்களில் தனக்கும் தனது சகாக்களுக்கும் என்ன நடக்கக் காத்திருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்தமாதிரிப் பலரிடம் புலிகள் கேட்டிருக்கிறார்கள். யாரையாவது தீர்த்துக்கட்டுவது என அவர்கள் தீர்மானித்தால், அவர்களை வெகுவிரைவில் விடுதலை செய்வது என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டும் வகையில் அவர்களுடன் கதைப்பார்கள். இந்த மாதிரியான கதைகளை பி.எல்.எப்.ரி. (PLFT) மற்றும் என்.எல்.எப்.ரி. (NLFT) இயக்கங்களைச் சேர்ந்த விவேகானந்தன் (அன்ரன்), 'தீப்பொறி' நோபேர்ட் ('புதியதோர் உலகம்'எழுதிய கேசவன்) ஆகியோர் உட்படப் பலருடன் கதைத்ததை நான் அறிவேன். ஆனால் அவர்கள் எவருமே இன்று உயிருடன் இல்லை.

வின்சன்ற் சைக்கிள் கழுவிப்பூட்டும் வேலை முடிந்த சில நாட்களின் பின்னர் ஒரு நாள் காலை புலிகள் திடீரென எமது வதை முகாமுக்கு வந்தனர். எம்முடன் இருந்த வின்சன்ற், பிரகாஸ் ஆகிய இருவருக்கும் 'லக்ஸ்' சவர்க்காரமும், புதிய சாரம் சேர்ட்டும் கொண்டு வந்து கொடுத்து, அவர்களைக் குளித்து புறப்பட்டு நிற்கும்படி புலிகள் சொன்னார்கள். இந்த நடவடிக்கை அவர்களுக்கு மட்டுமின்றி, சிறைக்குள் இருந்த எங்கள் அனைவருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது. அங்கிருந்த அனுபவஸ்தர்கள் சிலர் விடுதலை செய்யப்படுபவர்களுக்குத்தான் அவ்வாறான ;சீர்வரிசைகள்' நடப்பதுண்டு என்றும், எனவே அவர்கள் இருவருக்கும் விடிவு காலம் வந்துவிட்டது என்று சொன்னார்கள். இன்னும் சிலரோ, புலிகள் ஒருவருக்கு மரண தண்டனை வழங்குவதானாலும், விடுதலை செய்வதானாலும் அல்லது வேறு சிறை ஒன்றுக்கு மாற்றுவதானாலும், எப்பொழுதுமே இரவில் செய்வதுதான் வழமை என்றும், எனவே இது வேறு ஏதோ ஒரு நடவடிக்கைக்காக இருக்கலாம் என்றும் சொன்னார்கள்.



Yarl TV Live

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

CNN
BBC
Newsnow

வின்சன்றும் பிரகாசும் புலிகள் சொன்னதின் பிரகாரம் குளித்து புதிய உடைகளை அணிந்து தயாரானதும், அவர்களையும் பக்கத்து அறையில் இருந்த மகேஸ்வரன், பஸ் நடத்துநர் ஆகியோரையும் சில புலிகள் வந்து வெளியே அழைத்துச் சென்றனர். மாலையில் அவர்கள் திரும்பவும் சிறைக்குள் கொண்டு வந்து விடப்படும் வரையும், சிறைக்குள் இருந்தவர்களின் அன்றைய பேசுபொருளாக அந்த நால்வரும் எங்கே அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்ற விடயமே இருந்தது. மாலையில் அவர்கள் நால்வரும் களைத்துச் சோர்ந்த நிலையில் வந்து சேர்ந்து பேயறைந்தவர்கள் போல் யாருடனும் பேசாமல் இருந்தபோதுதான், அவர்கள் ஏதோ விபரீதத்தில் சிக்கியிருக்கிறார்கள் என்பது எமக்குப் புரிந்தது.

சில மணித்தியாலங்களின் பின்னர் வின்சன்ற் தான் எம்மில் சிலருக்குத் தாம் அன்றைய தினம் எங்கே கொண்டு செல்லப்பட்டோம், என்ன நடந்தது போன்ற விடயங்களை மெதுவாகக் கூறத்தொடங்கினார்.

வின்சன்ற் கூறியதின் பிரகாரம், புலிகள் அந்த நால்வரையும் யாழ்.குடாநாட்டின் சில பகுதிகளுக்குக் கூட்டிச்சென்று, ஏற்கெனவே தாம் தயாரித்து வைத்திருந்த மேடைகளில் ஏற்றி நிறுத்தியிருக்கிறாhகள். அதன் பின்னர் புலிகளில் ஒருவன் அங்கு கூடியிருக்கும் மக்கள் முன்னால் வந்து நின்று, அந்த நால்வரும் புலிகள் இயக்கத்துக்கும், ‘தமிழீழத்’திற்கும் எதிராக இழைத்த குற்றங்களை வாசிப்பான். அந்த நால்வரும் இராணுவத்துக்கு என்னென்ன ‘காட்டிக்கொடுப்பு’ வேலைகளைச் செய்தார்கள் என்பது அந்தக் குற்றச்சாட்டுகளில் பட்டியலிடப்பட்டு இருக்கும். அதன் பின்னர் அந்த புலி மக்களை நோக்கி இப்படியான துரோகிகளுக்கு என்ன தண்டனை வழங்கலாம் எனக் கேட்பான்.

ஏற்கெனவே பொதுமக்களுடன் பொதுமக்களாக நிற்கும் புலிகளின் எடுபிடிகள் “இந்தத் துரோகிகளுக்கு மரண தண்டனைதான் வழங்க வேண்டும்” என உரத்துக் கூறுவார்கள். முன்னே ஓர் ஆடு போனால் பின்னால் எல்லாம் தலையைக் கவிழ்ந்து கொண்டு போகும் செம்மறி ஆட்டுக்கூட்டம் போல, அங்கிருப்பவர்கள் எல்லோரும் அதையே திருப்பிக் கூறுவார்கள். ஏனெனில் ‘துரோகி’ என்று சொன்னால் அவனுக்கு மரண தண்டனை தான் ஒரே தீர்ப்பு என்பது அன்றும் இன்றும் தமிழனின் அகராதியில் அழியாது இடம் பெற்றுள்ள வார்த்தை அல்லவா?

இந்த துரோகி பட்டமளிப்பு ‘தேசியத் தலைவர்’ பிரபாகரன் காலத்தில் ஆரம்பித்தது அல்ல. தமிழர்களின் ‘தேசியத் தந்தை’ எஸ்.ஜே.வி.செல்வநாயகம் காலத்தில் ஆரம்பித்த வைக்கப்பட்டது. “ஈழத்துக் காந்தி’ – ‘அகிம்சா மூர்த்தி’ செல்வநாயகத்தை மேடையில் வைத்துக்கொண்டே, “துரோகிகளை இயற்கையாக மரணிக்க விடக்கூடாது” எனத் தமிழ் இளைஞர் பேரவை வண்ணை ஆனந்தன் போன்றவர்கள் பேசிய போது, அந்த வன்முறைபை; பேச்சைக் கண்டிக்காது இரசித்தவர் அல்லவா ‘தந்தை’. அந்தத் தைரியத்தில்தான் பிரபாகரனும் அவரது குழுவினரும் யாழ.;மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவை சுட்டுப்படுகொலை செய்தபோது, அந்த படுகொலைக் கலாச்சாரத்தை தொடர ஊக்கமளித்தவர்கள் அல்லவா அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை! (பின்னர் அதே வன்முறைக் கலாச்சாரத்துக்கு அ.அமிர்தலிங்கம் போன்றோர் பலியானது வேறு கதை)

எனவே இந்த நால்வருக்கும் மரண தண்டனைதான் வழங்கப்பட வேண்டும் என ‘தமிழிPழ’ மக்களின் அபிப்பிராயம் சொல்கிறார்கள் எனப் பிரச்சாரம் செய்வதற்காகவே இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. அடுத்த இரண்டு வாரங்கள் இந்தக் காட்சி யாழ்.குடாநாட்டிலும் வன்னியிலும் அரங்கேறியது. சில இடங்களில் ‘பொதுமக்கள்’ இந்த நால்வரையும் கல்லால் தாக்கியும், காறித் துப்பியும் தமது மிருகக் குணத்தை வெளிப்படுத்திக் கொண்டனர். கிளிநொச்சிக்கு இவர்கள் நால்வரும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டு, வின்சன்ற் சைக்கிள் கடை வைத்திருந்த இடத்துக்கு அருகிலுள்ள கந்தசாமி கோவிலுக்கு முன்னால் நிறுத்தப்பட்டனர். அப்போது வின்சன்றுக்கு சைக்கிள் திருத்திய கூலிக்குரிய பணத்தினை நீண்டகாலமாக கொடுக்காமல் டிமிக்கி கொடுத்துத்திரிந்த, அவரால் கடுமையாகக் கண்டிக்கப்பட்ட ஒருவன், முன்னால் வந்து நின்று தடியொன்றினால் வின்சன்ற்ரை தாறுமாறாக விளாசிவிட்டுச் சென்ற சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இந்த நால்வரையும் பார்ப்பதற்காகவே ஏராளமான மக்கள் அவர்கள் காடசிப்படுத்தப்பட்ட இடங்களில் கூடியிருக்கிறார்கள். ஆனால் ஒருவராவது புலிகள் செய்வது மனித நாகரீகத்துக்கு அப்பாற்பட்ட செயல் எனக் கண்டிக்கவே இல்லை. அவ்வாறு கூடியவர்களில் எனது குடும்பத்தினர்கள், உறவினர்கள், தோழர்கள், நண்பர்களகளும் இருந்திருக்கிறார்கள் என்பதை, நான் விடுதலையாகி வந்த பின்னர் அறிந்து கொண்டேன். அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்றது வேடிக்கை பார்ப்பதற்கல்ல. என்னையும் அங்கு அப்படிக் கொண்டு வருகிறர்களா என்று அறிவதற்காகவே!

தொடரும்..